# D E P O S I T I O N O F W I T N E S S

\--------

## IN THE COURT OF SUBORDINATE JUDGE, GOBICHETTIPALAYAM

## OS.407/2023

Deposition of witness for

| | | | |
|---|---|---|---|
| Name: | திருமூர்த்தி | Taluk | |
| Husband's / Father's Name: | | Calling: | |
| Village: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**06.02.2026.**

**வா.சா. 3 : திருமூர்த்தி**

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் 7ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ரங்கசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி ரங்கசாமி தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்தை யாருக்காக யார் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ரமணி தனக்காகவும், மைனர் குழந்தைகளுக்காகவும்வேண்டி தங்கவேலுக்கு கொடுத்தார். மேற்படி கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி சாட்சி கையொப்பம் செய்யும்போது 2, 3 பிரதிவாதிகள் மைனர்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2, 3 மைனர் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பாகத்தை விற்பனை செய்யும்போது நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறவேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கையொப்பம் செய்த கிரைய பத்திரத்தில் 2, 3 மைனர் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பாகத்தை விற்பனை செய்யும்போது நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறவேண்டும் என்ற விவரத்தை எழுதியிருந்தார்களா என்றால் இல்லை. 2, 3 மைனர் பிரதிவாதிகளின் பாகத்தை ஏமாற்றி வாங்கவேண்டும் என்ற வாதியின் நோக்கத்திற்கு நான் துணைபோயுள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 மைனர் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பாகத்தை விற்பனை செய்யும்போது நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறவேண்டும் என்ற விவரம் எனக்கு

தெரியாது என்பதாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளின் சொத்தை வாதி ஏமாற்றி வாங்கியுள்ளதால் 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் சாட்சி கையொப்பம் செய்த கிரைய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளைப்பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted / read over to the witness and admitted by the deponent to be correct"

Subordinate Judge,
Gobichettipalayam.